[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] 1975 நவம்பர் 6]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) 371.

(இ) அவைகளில் தீர்ப்பு கூறப்பட்டுள்ளவை 293. தீர்வு காணுமல் நிலுவையில் இருப்பவை 78.

(உ) மொத்தம் நிலுவையிலுள்ள 78 வழக்குகளில் 45 வழக்குகள் திருநெல்வேலி துணை ஆணையருக்கு மாற்றப்பட்டுள்ளன. மீதியான 33 வழக்குகள் விசாரணையில் உள்ளன.

திருப்பெரும்புதூர் கிராமத்தொழில் திட்டக்குழு

*225 வினு—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டம், திருப்பெரும்புதூரில் அமைந்துள்ள கிராமத்தொழில் திட்ட ஆலோசனைக்குழுக் கூட்டம் சீராக நடைபெறுவதில்லை என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, ஏற்கனவே திருப்பெரும்தூரில் கிராமத் தொழில் திட்ட ஆலோசனைக் குழு திருப்பெரும்புதூர் வட்டத்திற்கும், திருவள்ளூர் வட்டத்திற்கும் உரியதாக இருந்தது. அப்பொழுது எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களும் அதில் உறுப்பினர்களாக இருந்தார்கள். ஆனால் இப்பொழுது மாவட்டம் முழுவதற்குமாக உருவாக்கி ஒரு சட்டமன்ற உறுப்பினர் மட்டும் அதில் இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களும் தங்கள் தொகுதி தொழில் திட்டம் பற்றிக் கூறும் வகையில் மாவட்டத்தின் எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களும் அதில் இடம்பெற நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, முதலில் இந்தத் திட்டம் சில மாவட்டங்களினுடைய சில இடங்களில் மட்டும் செயல்படுத்தப்பட்டது. பிறகு மாவட்டம் முழுவதும் விரிவாக்கப்படும் நேரத்தில் மாவட்டத்தின் சார்பில் ஒரு சட்டமன்ற உறுப்பினரும், ஒரு நாடாளுமன்ற உறுப்பினரும்

அந்தக் குழுவில் இடம் பெற்றால் போதும் என்று சொல்லி 74-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. சட்டமன்ற உறுப்பினரும், நாடாளுமன்ற உறுப்பினரும் அதிலே பங்குகொள்ள வேண்டியதைப்பற்றிய உத்தரவு 1975—மார்ச் மாதத்தில் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டமன்ற உறுப்பினரும், நாடாளுமன்ற உறுப்பினரும் அந்த மாவட்டம் முழுவதும் இருக்கின்ற குறைபாடுகளை அந்தக் குழுவிலே சொல்ல முடியும் என்ற நம்பிக்கையில்தான் நாம் நியமனம் செய்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

(அ) குழித்துறை காவல் துறை ஆய்வாளர் ஒரு வழக்கறிஞரை அவமதித்ததாகக் கூறப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆர். பொன்னப்ப நாடார், திரு. ஜே. ஜேம்ஸ், திரு. என். டென்னிஸ் ஆகிய மூவரும்

" the serious and tense situation prevailing at Kuzhithurai by the conduct of the Inspector of Police, Kuzhithurai on the alleged insult committed against Sri S. R. Muthiah, Advocate, Kuzhithurai Bar on 29th October 1975 at about 10 a.m. and the boycott of the Courts by the Members of the Local Bar Association. "

என்ற பொருள்பற்றி விவாதிக்க வேண்டுமென்று ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைச் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.